**MCOP.No. 248/2025**

Date : 11.06.2026

Witness Name & Rank - தேவகி - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. எனக்கு விபத்து குறித்த தகவலை யார் சொன்னது என்றால் மாடசாமி சொன்னார். இறந்த போன நபரை மருத்துவமனையில் சேர்த்து யார் என்றால் ரமேஷ் ஆகும். எனது கணவருக்கு மது பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கில் விபத்து பதிவேடு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது கணவர் முதல் உதவி சிகிச்சைக்கு அரசு மருத்துவமனையில் சேர்த்த போது அவர் மது போதையில் இருந்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டதால் தான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அதே போல் எனது கணவர் ஓட்டிச்சென்ற வாகனத்தின் ஆய்வு அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.
2. எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் அவர் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு உரிய தகுதிச்சான்று பதிவு சான்று காப்பீடு இல்லாததால் அது தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் மது போதையில் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஓட்டி விபத்தை வரவழைத்து கொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு உடன் பிறந்த ஒரு தம்பி உண்டு என்றால் சரிதான். எனது மாமனார், மாமியார் என்ன வேலை என்றால் முதலில் கூலி வேலை பார்த்து வந்தனர் தற்போது இல்லை. ரேஷன் அட்டை தாக்கல் செய்யப்டவில்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் மற்றும் மாமியார் அவர்களை எனது மைத்துனர் கவனித்துக்கொள்கிறார் என்றால் இல்லை. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கூலி வேலை செய்து வருகிறேன். எனது கணவர் தனியாக வாழ்ந்து வந்தார் என்றால் இல்லை. எனது கணவருக்கு வருமான சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே எனது கணவருக்கு நிரந்தர வருமானம் இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.